தலைவியின் காலத்திலே விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இனிமேல் இந்தப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை. கடந்த காலங்களிலே போல இருக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 526, திரு. வ. மு. சுப்பிரமணியம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

526—

மானாமதுரை தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1384—திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரைத் தொகுதியில் ஆழ் குழாய் போடப்பட்டு உப்புத் தண்ணீர் வந்துள்ள இடங்களில் வைகையாற்றில் இருந்து தண்ணீர் எடுத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமல் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல் வடிவம் பெறும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வ.மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டிமான்டில் உப்பு தண்ணீர் என்று சொல்லியிருக்கிறேன். உப்பு நீர் பருகுவதற்கு ஏற்றதல்ல. ஆதலால் எங்களுடைய தொகுதியில் வைகை ஆறு 50 கிலோ மீட்டர் தூரம் ஊரின் நடுவில் செல்கிற நிலையில், அந்த வைகை ஆற்றிலிருந்துதான் மதுரை மாநகருக்கும், சிவகெங்கை நகருக்கும், அருப்புக்கோட்டை நகருக்கும் இன்னும் சொல்லப் போனால் கடலாடிக்கும்கூட குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே, அங்குள்ள மக்கள் நன்னீரைப் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை ஒன்றியத்தில் வைகை ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு வலசை வட்டம்பாக்கி. குருந்தங்குளம், செங்களத் தூர் மற்றும் 13 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. நீர் உறிஞ்சி கிணறு அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிக விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில் பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று பல நூற்றுக்கணக்கான கிராமங்களில். ஏறக்குறைய எல்லா கிராமங்களிலும் உப்பு தண்ணீராக இருப்பதால் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பல திட்டங்களாக மாற்றி. பரவலாக ஆக்கி பல இடங்களுக்கு இத்திட்டம் பயன்படும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களுக்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால் குடிநீர் வடிகால் துறையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இதில் எந்தெந்த வகையில் நீர் ஆதாரத்தை மக்கள் பெற முடியும் என்பதை ஆய்வு செய்து அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 527, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

527—

பாலாறு—ஆரணி குடிநீர்த் திட்டம்.

*4036—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆரணி நகரின் குடிநீர் பிரச்சினைக்கு நிரதர தீர்வுந் ஏற்பட பாலாறு-ஆரணி குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

TRUTH ALONE TRIUMPHS